**குழித்துறை நகர்மன்றத்தின் 18-10-2023 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியில் தற்பொழுது பெய்து வரும் பருவமழை காரணமாக கீழ்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

1) ராஜீவ் நகர் முதல் ஊத்தங்கரை - 1 வரை
2) வெட்டுகாட்டு விளை முதல் படப்பறை - 2 வரை
3) Y.M.C.A. முதல் துரும்பல் சாலை
4) திருத்துவபுரம் முதல் உண்டனாகுழி சாலை

மேற்கண்ட சாலைகள் பொதுமக்கள் நலன்கருதி கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுநிதி 2023-2024-ன்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | சாலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ராஜீவ் நகர் முதல் ஊத்தங்கரை சாலை வார்டு 2 (Unicode 149002L005) சிமெண்ட் கான்கிரீட் தளமாக அமைக்கும் பணி | 29.00 இலட்சம் |
| 2 | வெட்டுக்காட்டுவிளை முதல் படப்பறை -2 சாலை (Unicode 149003L012) சிமெண்ட் கான்கிரீட் தளமாக அமைக்கும் பணி | 7.50 இலட்சம் |
| 3 | திருத்துவபுரம் சந்திப்பு முதல் உண்டனாகுழி சாலையை தார் சாலையாக சீரமைக்கும் பணி (Unicode 149002R005) | 51.00 இலட்சம் |
| 4 | Y.M.C.A. முதல் துரும்பல் சாலை வார்டு எண்.11 தார் சாலையாக சீரமைக்கும் பணி | 18.00 இலட்சம் |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2059/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.653 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26978/2023/எப்ஏ1, நாள் 28-08-2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணியினை நகராட்சி பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.912/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.654 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சியில் பொதுநிதியின்கீழ் 2023-2024-ன்கீழ் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 06-10-2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன் | 0.27% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.M. ஜாண்சன் | 16.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 3 | திரு.D. ஜஸ்டின்குமார் | 22.01% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.912/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.655 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சியில் பேருந்து நிலையம் செல்லும் கருங்கல் சாலையில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை முழுவதுமாக இடித்து புதியதாக நவீன தினசரி சந்தை கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.35, நாள் 18-08-2023-ன்படி ரூ.14.60 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-ன்கீழ் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 50% நிதியும், நகராட்சி பங்களிப்பு தொகை 50%-ல் பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தினசரி சந்தை அமைக்க மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.913/2023/இ1.
மன்றத்தீர்மான எண்.656 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சியில் பேருந்து நிலையம் செல்லும் கருங்கல் சாலையில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கட்ட 20-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஷன் | 5.52% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S. சபரிதரதன் என்ஜினியரிங் | 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.913/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.657 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அரசுத் தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கிட முதற்கட்டமாக செயல்படுத்துதல் ஆணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு தட்டு மற்றும் டம்ளர் NEW AANDI NADAR METAL நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டதின் விவரம் பின்வருமாறு.

1) தட்டுகள் - 240 X 94.5 = 22,680
2) டம்ளர்கள் - 240 X 15.50 = 3,960

-----------------
26,640
------------------

எனவே மேற்படி பெறப்பட்ட தொகையினை வழங்கிடவும், மேலும் பணியின் அவசியம் கருதி ஏற்படும் செலவினத்தையும் பொதுநிதியின்கீழ் செலவிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1967/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.658 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.